**செய்தி வெளியீடு: எண் 535        நாள் :   5–7–2008**

## வெளிநாட்டினர் தமிழகத்தில் நிலம் வீடு முதலிய அசையாச் சொத்துகள் வாங்குதல் குறித்து தமிழக அரசு விளக்கம்

இலங்கை அகதிகள் தமிழகத்தில் சொத்து வாங்குவதை அனுமதிக்க இயலாது என்பது போல் தவறான பொருள் தரும் வகையில் சில பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்துள்ளன.

இந்தியர் அல்லாதவர் இந்தியாவில் சொத்து வாங்குவது குறித்த விதிமுறை இந்தியா முழுவதும் நடைமுறையில் உள்ளது. இந்திய அரசின் அசையாச் சொத்து மேலாண்மை, கையகப்படுத்துதல் மற்றும் மாற்றம் பற்றிய ஒழுங்குமுறை விதிகளின்படி:

> "பாகிஸ்தான், பங்ளாதேஷ், ஸ்ரீலங்கா, ஆப்கானிஸ்தான் சைனா, ஈரான், நேபாளம் அல்லது பூடான் ஆகிய எந்த ஒரு நாட்டின் குடியுரிமை பெற்றவரும் ரிசர்வ் வங்கியின் முன் அனுமதி பெறாமல் இந்தியாவில் அசையாச் சொத்துகளை வாங்கவோ அல்லது விற்கவோ கூடாது"

–என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அசையாச் சொத்துகளை வாங்குவதற்கும் அல்லது விற்பதற்கும் இந்திய அரசு மற்றும் ரிசர்வ் வங்கியின் சட்டதிட்டங்கள் மற்றும் ஆணைகளின்படி செயல்படவேண்டும் என்பது இதன் மூலம் தெளிவு படுத்தப்படுகிறது.

.................................................................

வெளியீடு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9